ஸ்ரீ:

சுபக்ருத் ௵ சித்திரை ௴
ஏப்ரல் - மே 2022

மலர்: 5
இதழ்: 1

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com





பகவத் ராமானுஜர் (சித்திரை - திருவாதிரை) மே 5 (வியாழன்)

சுபக்ருத் ஸூ சித்திரை மீ
ஏப்ரல் - மே 2022

மலர்: 5
இதழ்: 1

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

6.30 - விச்வரூபம்
8.30 - திருவாராதனம்
9.45 - சாற்றுமுறை

**வியாழன் முதல் சனி வரை**

6.00 - விச்வரூபம்
7.30 - பொது தரிசனம்

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஸ்ரீ ராமனுக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்துவைக்க ஆசைப்பட்ட தசரத சக்ரவர்த்தீ, அதற்கான நல்ல நாளையும் குறித்துவிடுகிறார் – 'சைத்ர ஸ்ரீமாந் அயம் மாஸ: புண்ய: புஷ்பித கானன:| யௌவராஜ்யாய ராமஸ்ய ஸர்வமேவ உபகல்ப்யதாம்' என வஸிஷ்டாதிகளை ப்ரார்த்திக்கிறார்.

இங்கு மாதத்தைக் குறிப்பிடும்போது இரு அடைமொழிகளுடன் பேசுகிறார் – 'ஸ்ரீமாந்' / 'புண்ய:' என. இதற்கு 'திருநிறைச் செல்வம் பெற்ற' / 'புனிதமான' எனப் பொருளாம். 'காட்டில் மரங்களெல்லாம் பூத்துக்குலுங்கி' நிற்பது, அடையாளமாகக் காட்டப்பட்டது; ஆயினும் காரணம் சொல்லப்படவில்லையே... இப்படித்தான் இருக்கவேணும்:–

காடான 'அரண்யம்' (வேதம்) நன்கு காக்கப்பட்டதால் பூரித்தது. 'விததே தா: ஸ்திரநீதி பஞ்ஜரஸ்தா: (உபநிஷத்துக்கள் வலிமையான ந்யாயங்களெனும் கூட்டில் இருப்பனவாக ஆக்கப்பட்டன – 14) என்பது வேதாந்தவாரியன் வாக்கு. இது, எம்பெருமானாரைத் துதிக்கும் யதிராஜஸப்ததியில் அருளப்பட்டது. அதாவது, வேதங்களைக் காக்க எம்பெருமானார் அவதரித்தது, சித்திரைத் திங்களில்தானே; ஆக மாதம் மகிழ்ந்தது ஸ்ரீமாந் ஆயிற்று / புனிதமாயிற்று.

மற்றும், ஆசார்ய பக்தி எனும் நல்வழியான தொல்வழியைக் காட்டியருளிய துன்பற்ற மதுரகவி தோன்றிய திங்களும் சித்திரைதான்.

தேசிக பக்தர்களுக்கு இப்படியும் யோஜித்து மகிழ அமையுமோ! நம் 'தேசிக ஸந்தேசம்' அவதரித்ததும் ஒரு சித்திரையில்தானே. இன்று நான்கு ஆண்டுகள் கடந்து ஐந்தாம் ஆண்டில் முத்திரை பதிக்க முதலடி எடுத்துவைக்கும் இத் தருணத்தில், இதனாலும் இம்மாதம் ''ஸ்ரீமாந்'' என்றும் ''புண்ய:'' என்றும் ஆகியது என நினைந்து போற்றி மகிழ்வோம்.

விசேஷ வ்யாஸங்களுடன் கீழ்க்கண்ட உத்ஸவங்களின் வண்ணப்படங்களுடன் இந்த மலர் உங்கள் கையில்:

✓ பங்குனி உத்தரம் மற்றும் ஊர்கோல உத்ஸவம்

✓ தேவஸ்தானத்தின் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்ய அஸோஸியேஷனின் பவள விழா

✓ உகாதி உத்ஸவம்

✓ ஸ்ரீராமநவமி உத்ஸவம்

✓ தன்வந்தரி ஹோமம்

✓ ச்ரவணம் மற்றும் சதயம்

கண்டு வாசித்து இன்புறுமின்!

ஸ்ரீ:

# May New Year 'Subhakruth' Live Up To Its Name

## FROM THE DESK OF TRUSTEES

The month of 'Chithirai' heralds the Tamil New Year 'Subhakruth' (one that does or brings auspiciousness) under a far better circumstances on the pandemic front than what it was at the advent of the previous year 'Plava'. The new year brings with it new hopes. Let us invoke the Divya Dampathis, Bhagavath Ramanuja and Swami Desika that the new year lives up to its name and bestows unbridled blessings on all of us the whole of this year and beyond.

We are happy to share that 'Desika Sandesam' has completed four years since its launch by Srimath Azhagiyasingar in April 2018 with the benediction of our Swami Desikan. We may state here with conviction that the magazine serves well the twin purposes of imparting important tenets of our Sampradaya through articles as also chronicling the happenings and festivals at our temple. As a by-product it serves as a link between the temple and its devotees.

During last month, Panguni Utharam festival was celebrated with Oonjal Sevai, Thirukkalyana Utsavam and special Serthi Sevai and was followed by Oorkola utsavam the next day. Ugadi purappadu and Sri Ramanavami Utsavam (10 days) were among the other significant Utsavams conducted during the month.

The Platinum Jubilee (completion of 75 years of Sripadham service at our temple) of the Sri Vaishnava Sripatham Kainkaryam Association was celebrated with a four-day commemorative event (March 24 to 27). This comprised an Upanyasam by Sri Dushyanth Sridhar on the first evening, Thirumanjanam to Perumal Moolavar, Thayar Moolavar and Thayar Utsavar followed by Vedaparayanam in the morning and a special Ghana Parayanam in the evening on the second day, Nalayira Divya Prabandham and Desika Prabandham Sevakalam with Satrumurai on the third day, and a special Thirumanjanam to Perumal Utsavar, Thayar Utsavar, Sri Peyazhwar and Swami Desikan, as well as a special Thiruveethi purappadu on the concluding day. A function to mark the milestone was held in the evening of the last day in which a souvenir and a book titled 'Mangalaasaana Maalaa' were released. Earlier on the second day, a Golden Kavacham to Sri Pezhahwar (Moolavar) was offered by the Association.

The Devasthanam organised a special Dhanvantari Homam on March 20 in which Archakas from Kancheepuram and Tiruvallur participated along with those from our temple. Hundreds of devotees attended and received the holy Raksha and other Prasadhams.

The Sishyas of Sri U.Ve. Adoor Asoori Madhavacharya Swami organised a function at our temple to mark the completion of his Kalakshepam of Swami Desikan's Srimath Rahasya-Thraya Saaram, with Satrumurai on April 3. Eminent scholars graced the occasion and delivered Anugraha Bhashanam.

Moving forward, we have the annual Utsavams like Chitra-Pournami (to take place with the customary visit to Mambalam after a gap of two years), Thotta Utsavam (at Srirangam Srimath Andavan Asramam, Mylapore), the 10-day Sri Bhasyakarar Utsavam and Madhurakavigal Satrumurai slated for the first month of the new year.

ஸ்ரீ:

# சுபக்ருத் வருட சித்திரை மாத பஞ்சாங்கம்

| ஆங்கிலம் | தமிழ் | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஏப்ரல்/ மே | சித்திரை | | | | | |
| 14.04.22 | 1 | த்ரயோதசி | வியாழன் | பூரம் | சித்திரை விஷு புண்ய காலம். காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ T.D. விஜயராகவன் குடும்பத்தினர் |
| 15.04.22 | 2 | சதுர்தசி | வெள்ளி | உத்தரம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர், திருமஞ்சனம். மாலை தாயார் உள்புறப்பாடு, ஆஸ் தானம். இரவு பெருமாள் மாம்பலம் ஏழுந்தருளல் | ஸ்ரீ மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |
| 16.04.22 | 3 | பௌர்ணமி | சனி | ஹஸ்தம் | சித்ரா பௌர்ணமி – மதியம் பெருமாள் திருமஞ்சனம். பிறகு கோவிலுக்கு எழுந்தருளல் | சித்ரா பௌர்ணமி கமிட்டி |
| 17.04.22 | 4 | ப்ரதமை | ஞாயிறு | சித்திரை | மதுரகவியாழ்வார் | |
| 18.04.22 | 5 | த்விதீயை | திங்கள் | ஸ்வாதி / விசாகம் | ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ஹர் திருமஞ்சனம் ஆஸ்தானம் | |
| 19.04.22 | 6 | த்ருதீயை | செவ்வாய் | அநுஷம் | ஸ்ரீமந் நாதமுனிகள் | |
| 20.04.22 | 7 | சதுர்த்தி | புதன் | கேட்டை | ஸ்ரீ தொண்டரபொடியாழ்வார் | |
| 21.04.22 | 8 | பஞ்சமி | வியாழன் | மூலம் | திருமால்வடை. | |
| 22.04.22 | 9 | ஷஷ்டி / ஸப்தமி | வெள்ளி | பூராடம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர், திருமஞ்சனம். மாலை தாயார் உள்புறப்பாடு, ஆஸ்தானம். | ஸ்ரீ மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |
| 23.04.22 | 10 | ஸப்தமி / அஷ்டமி | சனி | உத்தராடம் | ஸ்ரீ ஆளவந்தார், தோட்ட உத்ஸவம் | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங் கர்யம் அஸோஸி யேஷன் (பதிவு) |
| 24.04.22 | 11 | அஷ்டமி / நவமி | ஞாயிறு | ச்ரவணம் | பெருமாள் உத்ஸவர், தேசிகன் திருமஞ் சனம். மாலை பெருமாள், தேசிகன் வீதி புறப்பாடு, ஆஸ்தானம், சாற்றுமுறை | ஸ்ரீ N.S. ஸ்ரீநிவாஸன் |
| 25.04.22 | 12 | தசமி | திங்கள் | அவிட்டம் | ஸ்ரீ பூதத்தாழ்வார் | |
| 26.04.22 | 13 | ஏகாதசி | செவ்வாய் | சதயம் | ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் 1ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதி புறப்பாடு. பின்பு பெருமாள், ஸ்ரீ பாஷ்யகாரர் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு. மாலை பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ பாஷ்யகாரர்: ஸ்ரீ நெம்பிலி வீரவல்லி குடும்பத்தினர். ஏகாதசி: பழவேரி லக்ஷ்மி நரஸிம்ஹாசார்யார் |
| 27.04.22 | 14 | த்வாதசி | புதன் | பூரட்டாதி | ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் 2ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ்சனம். மாலை பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | புரிசை ஸ்ரீ R. ராமக்ருஷ்ணன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28.04.22 | 15 | த்ரயோதசி | வியாழன் | உத்தரட்டாதி | ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் 3ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ்சனம். மாலை பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ V.R. ராஜகோபால் ஐயங்கார் குடும்பத்தினர் |
| 29.04.22 | 16 | சதுர்தசி | வெள்ளி | ரேவதி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் உள்புறப்பாடு, ஆஸ்தானம். ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் 4ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம் ஸேவாகாலம், சாற்றுமுறை | தாயார்: ஸ்ரீ மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட். ஸ்ரீ பாஷ்யகாரர்: தள்ளம் ஸ்ரீ S. ரகுநாதாசார்யர் |
| 30.04.22 | 17 | அமாவசை | சனி | அச்வினி | காலை பெருமாள் – உத்ஸவர் திருமஞ் சனம். மாலை வீதி புறப்பாடு. ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவர் 5ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | அமாவாசை: ஸ்ரீ திருக் கண்ணமங்கை தேவநாதாசார்யர் குடும்பத்தினர். ஸ்ரீ பாஷ்யகாரர்: ஸ்ரீ T.R. தேவ நாதாசார்யர் |
| 01.05.22 | 18 | ப்ரதமை | ஞாயிறு | பரணி | வஸந்த உத்ஸவம் 1ம் நாள். காலை பெருமாள், தாயார், தேசிகன் – திருமஞ் சனம். மாலை ஆஸ்தானம். ஸ்ரீபாஷ்ய காரர் உத்ஸவம் 6ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ பாஷ்யகாரர்: வசந்த் ஷான்பாக். வஸந்த உத்ஸ வம்: ஸ்ரீ R. நாராயணன் |
| 02.05.22 | 19 | த்விதீயை | திங்கள் | க்ருத்திகை | வஸந்த உத்ஸவம் 2ம் நாள். காலை பெருமாள், தாயார், தேசிகன் – திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம். ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் 7ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதி புறப்பாடு. பின்பு திருமஞ்சனம். மாலை ஆஸ் தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ பாஷ்யகாரர்: ஸ்ரீமதி ஹேமலதா ராமாமணி. வஸந்த உத்ஸவம்: ஸ்ரீ R. நாராயணன் |
| 03.05.22 | 20 | த்ருதீயை | செவ்வாய் | ரோஹிணி | அக்ஷய த்ருதீயை. ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் 8ம் நாள். காலை ஸ்ரீ பாஷ்யகாரர் வீதி புறப்பாடு, திருமஞ் சனம். வஸந்த உத்ஸவம் 3ம் நாள். காலை – பெருமாள், தாயார் தேசிகன் திருமஞ்சனம். மாலை பொழுதுடன் ஆராதனம். திருவாய்மொழி ஸேவா காலம், சாற்றுமுறை. பின்புபெருமாள், தேசிகன் திருவீதி புறப்பாடு. பெருமாள் அலர்மேல்மங்கா புரம் எழுந்தருளல் | ஸ்ரீ பாஷ்யகாரர்: ஸ்ரீ R. முகுந்தன். அக்ஷயத்ருதீயை: ஸ்ரீ R. சந்த்ர சேகரன் |
| 04.05.22 | 21 | த்ருதீயை / சதுர்த்தி | புதன் | ம்ருகசீர்ஷம் | ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் 9ம் நாள். காலை வீதி புறப்பாடு, திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ T.C. ரங்க ராஜன் – T.C. ஸ்ரீநாத் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05.05.22 | 22 | சதுர்த்தி / பஞ்சமி | வியாழன் | திருவாதிரை | ஶ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் 10ம் நாள். காலை மங்களாசாஸநம், வீதி புறப்பாடு, பெருமாள், ஶ்ரீ பாஷ்யகாரர் திருமஞ்சனம். மாலை வீதி புறப்பாடு, ஆஸ்தானம் ஸேவாகாலம், சாற்றுமுறை. | மங்களாசாஸனம்: ஶ்ரீ S. ஸுந்தரம். காலை வீதி புறப்பாடு திருமஞ் சனம், மாலை வீதி புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை: ஶ்ரீ உ.வே. அழிசூர் ஶ்ரீநிவாஸாசார்யர் |
| 06.05.22 | 23 | பஞ்சமி / ஷஷ்டி | வெள்ளி | திருவாதிரை / புனர்வஸு | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் உள்புறப்பாடு. ஆஸ்தானம் | ஶ்ரீ மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |
| 07.05.22 | 24 | ஷஷ்டி / ஸப்தமி | சனி | புனர்வஸு | காலை ராமர் திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | V.D.R. பண்ட் |
| 08.05.22 | 25 | ஸப்தமி | ஞாயிறு | புஷ்யம் | திருமால்வடை. | |
| 09.05.22 | 26 | அஷ்டமி | திங்கள் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 10.05.22 | 27 | நவமி | செவ்வாய் | மகம் | ஶ்ரீ திருமழிசையாழ்வார் | |
| 11.05.22 | 28 | தசமி | புதன் | பூரம் | ஶ்ரீ ஆண்டாள் | |
| 12.05.22 | 29 | ஏகாதசி | வியாழன் | உத்தரம் | காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு, பிறகு தாயாருடன் உள்புறப்பாடு | ஏகாதசி: ஶ்ரீ K.S. கோவிந்த பிரசாத். உத்தரம்: ஶ்ரீ S.V.S. ராகவன் |
| 13.05.22 | 30 | த்வாதசி | வெள்ளி | ஹஸ்தம் | அவதார உத்ஸவம். காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர் திருமஞ் சனம். ஆத்ஸானம், ஸேவாகாலம் சாற்றுமுறை. மாலை பொழுதுடன் திருவாராதனம். பெருமாள் வீதி புறப்பாடு பிறகு தாயாருடன் உள்புறப்பாடு | அவதார உத்ஸவம்: திருமஞ்சனம் – SVDD staff. மாலை வீதி புறப்பாடு L.N. நரசிம்ஹன் குடும்பத்தினர். வெள்ளிக்கிழமை: ஶ்ரீ மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |
| 14.05.22 | 31 | த்ரோயதசி | சனி | சித்திரை | ஶ்ரீ மதுரகவிகள் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், மதுரகவி யாழ்வார் திருமஞ்சனம். மாலை வீதி புறப்பாடு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | சித்ரா பௌர்ணமி கமிட்டி |

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# க்ஷேமம்

ஸ்ரீ உ.வே. D. ராமஸ்வாமி ஐயங்கார், வைகுண்டவாஸீ

நலம், நாணயம், நிம்மதி, நீர்மை, நூண்ணறிவு, நூற்பயிற்சி, நெறி, நேர்மை, நையாமை, நொய்மையின்மை, நோயின்மை முதலிய வாழ்க்கையின் நல்ல அம்சங்களெல்லாம் அமைந்து போய், பலவிதமான தொல்லைகளுக்கும், முடிவு காணமாட்டாத இடுக்கண்களக்கும், மனிதர்கள் ஆளாகி வருந்துமிந்நாளில், நீடிய நல் வாழ்வும் நீங்காத செல்வமும் பெற்று அவர்கள் க்ஷேமப்பட வேண்டுமென்றால், இடைக்காலத்தில் மேனாட்டு நாகரீகத்தின் பயனாக ஏற்பட்ட மயக்கத்தால் மதி மயங்கி நழுவவிட்ட ஆத்ம ஸம்பந்தமான பெருமைகளை மீண்டும் மதித்து அவ்வழியாக ஏற்படும் மன அமைதியையும் உயர் நலங்களையும் எய்த முயலவேண்டும்.

உடல் நலத்தையோம்பி நிற்க வேண்டுமென்று வற்புறுத்த எண்ணிறந்த நூல்களும் அவைகளின் வழியே ஒழுகும் மனிதர்களும் உலகில் நிரம்பியிருக்கக் காண்கிறோம். ஆத்ம நலத்தை எடுத்துச் சொல்வோர் வெகு சிலரே. அது ஸம்பந்தமான நூல்கள் ஏராளமாக இருப்பினும் மதிப்பின்றி மங்கிக் கிடக்கின்றன. தேஹ நலம் இந்திரியங்கள் வாயிலாக உணரப்படுவதொன்று. ஆத்ம நலமோ இந்திரியங்களுக்கு விஷயமாகாததொன்று. ஆத்மாவென்று ஒன்று இல்லையென்றே மறுப்பவர் எத்தனை பேர்? ஆத்மா இருப்பினும் பரமாத்மாவென்று இல்லையென்று வாதம் செய்து கடவுளையே இல்லையென்று செய்ய முயலுபவர் எத்தனை பேர்? இவர்கள் நடுவில் வஸித்து இவர்களுடன் பழகி வருவோரில் ஆயிரத்தில் ஒருவன் நாஸ்தி (இல்லை) என்னாது அஸ்தி (உண்டு) என்று கூறி ஆஸ்திகன் என்று பெயர் பெற்று விளங்குவது எவ்வளவு கடினம்.

ஆஸ்திக்யம் வளர்ந்து கடவுளிடத்தில் நம்பிக்கையும் விச்வாஸமும் அன்பும் உலகில் வளர வேண்டுமென்றால் அது அவ்வக்காலங்களில் உலகத்தில் தோன்றி மாந்தர்க்கு நல்லறிவு புகட்டும் நல்லாசிரியர்களே புரியக்கூடிய பேருதவி. தன்னை வெறுத்து அவமதிக்கும் உலகத்தின் கண் மிக மிக தயை கூர்ந்து ஆண்டவன் அப்படிப்பட்ட பெரியோர்களை அடிக்கடி இங்கே தோன்றச் செய்கிறான் என்பது பலரறிந்த உண்மை. ராமனாயும், கிருஷ்ணனாயும் அவதரித்தது போதாதென்று ஆசார்ய வடிவில் எம்பெருமானே மீண்டும் மீண்டும் இவ்வுலகத்தில் தோன்றுகிறான் என்பது பல பெரியோர்களின் கொள்கை, அப்படிப்பட்ட அவதாரங்களுள் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகாவதாரம் ஒன்று. ராமக்ருஷ்ணாதி அவதாரங்களைக் காட்டிலும் உலகம் மிக்க பயனெய்தியது இவ்வவதாரத்தாலே. அதற்குக் காரணம் இவர் ஒரு அர்ச்சையின் அவதாரம். அர்ச்சையே ஒரு அவதாரம். அர்ச்சா வடிவில் அவதரித்து நெடுங்காலம் இங்கேயிருந்து இவ்வுலகின் தன்மையை நன்கறிந்த திருவேங்கடமுடையான் (ஸ்ரீநிவாஸப்பெருமாள்), தேசிக வடிவில் அவதரித்தமையால் உலகின் தத்கால நிலைக்கேற்ப உயர்ந்த உபதேச மொழிகளைத் தந்தும் இக்காலத்தவர் மனப்பான்மைக்குத் தகுந்த சரணாகதியென்னும் மோக்ஷோபாயத்தைக் காட்டிக் கொடுத்தும் நமக்குப் பேருதவி புரிய இயன்றது. திருவேங்கடமுடையான் திருவவதாரம் காட்டவே புரட்டாசித் திருவோணத்தில் தோன்றியது. இத்தோன்றலால் தான் உலகம் க்ஷேமமெய்தியது. எய்துவது. இது அதிசயோக்தியல்ல.

ஸ்வாமிதேசிகன் பெருமையும் அவர் செய்தருளிய மகோபகாரங்களும் பல வ்யாஸங்கள் மூலமாக விளங்குவன. உலக க்ஷேமத்திற்கு இவரே காரணம் என்றும் அதையே பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள், பேசியிருக்கிறார்கள், என்பது மட்டும் இங்கே எழுதப்படுகிறது.

ஸ்வாமி தேசிகன் திருவவதரிப்பதற்குப் பலவாண்டுகள் முன்னரே தோன்றி ஸ்ரீ வைஷ்ணவத்தை உலகில் நாட்டிய நம்மாழ்வார், தேசிகன் திருவவதாரம் தான். **''எப்பாலைக்கும் சேமத்தது''** (எக்காலத்திலும் க்ஷேமம் பயப்பது) என்று மங்களாசாஸனம் செய்தருளியிருக்கிறார் திருவிருத்தத்தில், **''நானிலம் வாய்க்கொணடு''** என்ற பாசுரத்தில் பொய்கை ஆழ்வார் அவதரித்த ப்ரதேசமாகிய திருவெஃகாவை ''கால் நிலம் தோய்ந்து விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகாவுது'' என்று நிர்த்தேசித்து, **''அம்பூந் தேனிளஞ்சோலை அப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே''** என்று மங்களாசாஸனம் செய்தருளி இருக்கிறார். திருவெஃகா பொய்கையாழ்வார் அவதார ஸ்தலம். திருத்தண்கா தேசிகன் அவதார ஸ்தலம். உபய வேதாந்த தர்சனம் ஒரு ஐப்பசித் திருவோணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு புரட்டாசித் திருவோணத்தில் சொல்ல வேண்டியவற்றையெல்லாம் சொல்லிப் போந்தமையாலே முற்றுப் பெற்றது போலும். எப்பாலைக்கும் மேலுள்ள ஆசார்யக ளெல்லாம் அதை வளர்த்து ப்ரசாரம் செய்த பேர்கள். சேமத்தது என்று ஆழ்வார் அருளிச்செய்த பெருமை தேசிகனிடத்தே தங்கியது.

ஸ்வாமி தேசிகன் அருளிச் செயல்களில் க்ஷேமம் வேண்டிப் பாடப் பெற்ற மங்கள ச்லோகங்களும் க்ஷேமத்தையே பலனாகக் காட்டிய பலச்ருதிகளும் அநந்தம். 'கலயது குசலம் ந: கோபி காருண்ய ராசி:' ''தேவோந: சுப மாத நோது:'', **''சேமமதாம் திருமால் தன் கருணையாலே''** என்பன அவற்றுள் சில. திருமாலிடத்தில் உலகத்திற்கு க்ஷேமம் வேண்டி அதையே ஆசாஸித்தது இவரைப் போல் ஒருவர் செய்துள்ளாரா என்று ஸந்தேகித்தல் ஸஹஜமே.

*உபயுக்தேஷு வைசத்யம் த்ரிவர்க நிரபேக்ஷதா |*
*கரணத்ரய ஸாரூப்யம் இதி ஸௌக்ய ரஸாயனம் ||*

என்று ஸம்ஸார வ்யாதியால் பீடிக்கப்பட்டிருக்கும் நமக்கு ஸௌக்ய ரஸாயனம் செய்து கொடுத்த வைத்திய ரத்தமும் இவ்வாசார்ய ரத்நமே.

ஸ்வாமிக்கு பின் தோன்றிய பெரியோர்களெல்லாம் **''கரோது க்ஷேமம் ந: கவிகதக கண்டீரவகுரு:''** என்ற கணக்கில் ப்ரார்த்தித்திருக்கிறார்களென்றால் அதிலென்ன வியப்பு!

---

# உடையவர் கிளிகண்ணி

**ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு**

1. பெரும்பூதூர் வள்ளலவன்
அருங்கோதைக் கண்ணனானான்
நூறுதடா அடிசில் இட்டான் கிளியே!
திருப்பாவை சீயரன்றோ கிளியே!
அருங்காதல் உடையவரே!

2. அரங்கனின் செல்வமெல்லாம்
திருத்தியே வழிசெய்தானே
நம்பெருமான் விழவெல்லாமே கிளியே!
நமக்கென வகைசெய்தானே கிளியே!
இமைப்பிலா உடையவரே!

3. போதாயனர் வ்ருத்தியுரை
டங்க த்ரமிட குகதேவர்சொல்
மாறாமல் கருத்திட்டானே கிளியே
சீபாடியம் சிறக்கநின்றான் கிளியே
சீதரனார் உடையவரே!

4. ஆழ்வாரது ஈரச்சொற்கள்
ஆலயத்துள் விண்ணப்பித்தான்
ஆரிருவர் கருத்தொட்டியே கிளியே
பாரில் சிந்தாந்தம் சொன்னான் கிளியே
மாறனடி உடையவரே!

5. தானானதோர் தமருகந்த
தானுகந்த திருமேனியாய்
காணக்கிடைத்தானடி கிளியே
கோடிக்கண் வேண்டுமடி கிளியே
ஆதிசேடன் உடையவரே!

6. ஒன்பெதென நூலேசெய்து
அன்புடனே நமக்களித்தான்
துன்பமேது சிந்தைகொள்வோம் கிளியே
அந்நலமே அடைந்திடுவோம் கிளியே
சொன்னதும் உடையவரே!

7. எம்பெருமான் தாமரைக்கண்
தம்மனத்தால் அறியக்கற்றான்
வில்லிதாசர் காணச்செய்தான் கிளியே
அந்தரங்கன் அடிமையவன் கிளியே
அந்தரங்கம் உடையவரே!

8. வைணவச்சீர் வளர்த்திடவே
வகையாகத் தெளிந்திடவே
வாழெழுபத்தி நான்கு கிளியே
விரிசிங்காசனமே கிளியே
வகுத்தவர் உடையவரே!

9. இராமகதை அனுசந்தித்து
சரணங்கொள்ள வழிவகுத்து
இருதொடரால் நடத்திவைத்தான் கிளியே
கருவறை இனிஇல்லையே கிளியே
வேறெவர்யார் உடையவரே!

10. ஆளவந்தார் விரும்பியதை
நாளிட்டு முடித்துவைத்தான்
தாளைச் சரணாகத்தான் கிளியே
வேளைதனில் நமக்குத் தந்தான் கிளியே
நாளும்பாட உடையவரே!

11. அடியார்க் கடியானுரை
உடையவர் கிளிகண்ணியை
தடைவெல்லத் தலைமேல்
கொள்வார் கிளியே
அடைவர் வைகுந்தநகர் கிளியே
அடைவிப்பர் உடையவரே!





பங்குனி உத்தரம்







ஶ்ரீ:





பங்குனி உத்தரம்



ஊர்கோல உத்ஸவம்













ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷனின் பவள விழா



















ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷனின் பவள விழா











ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷனின் பவள விழா











ஸ்ரீ:








ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷனின் பவள விழா







ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷனின் பவள விழா













ஸ்ரீ:





ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷனின் பவள விழா










ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷனின் பவள விழா







ஸ்ரீ உ.வே. ஆடூர் ஆஸு^ரி மாதவாசார்ய ஸ்வாமியின் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் காலக்ஷேப பூர்த்தி உத்ஸவம்









ஸ்ரீராமநவமி உத்ஸவம்



ஸ்ரீ:









உகாதி உத்ஸவம் ↑

↓ ஸ்ரீராமநவமி உத்ஸவம்

















ஸ்ரீராமநவமி உத்ஸவம்



ஸ்ரீ:

# நம் இராமானுசன் தந்த ஞானத்திலே

ஸ்ரீ உ.வே. காவனூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மேற்கு மாம்பலம்

**யதோ வாசோ நிவர்தன்தே -** க்ருஷ்ண யஜுர்வேதீய தைத்திரீய உபநிஷத்தில் ஓதப்படும் இவ்வாக்யத்தின் பொருள் வேதவேத்யனான எம்பெருமானின் பெருமையை அளவிட முடியாது என்பதாகும். எம்பெருமான் பெருமைகளை அளவிட முடியாது என்றால் எம்பெருமானாரின் பெருமைகளையும் அளவிட முடியாது.

மறந்தும் புறம் தொழாதோர்க்கு எம்பெருமானை விட எம்பெருமானாரே (எம்பெருமானார் மூலம் எம்பெருமானை அடைதல் என்று கொள்ள வேண்டும்) ஏற்றவர். அவர் திருவடி புகுந்தால் தான், கண்ணனின் திருவடிகளை அடைய முடியும் என்பதை ஸ்வாமி ஸ்ரீ தேசிகன்,

*அனுகல்பபூதமுரபித்பதம் ஸதாம் அஜஹத் த்ரிவர்மம் அபவர்க வைபவம் |*
*சலசித்தவ்ருத்தி விநிவர்தனௌஷதம் சரணம் யதீந்த்ர சரணம் வ்ருணீமஹே||*

என்று போற்றுகிறார். பகவான் அவதரித்து நம் பக்கலில் இருப்பினும், நம்மால் காண முடியவில்லை. ஸத்தை அடைய இயலவில்லை. உடையவரோ நமக்காகவே அவதரித்து எட்டவொண்ணாததை நமக்கு ஸுலபமாக்கினார். ஆதலால், ஆசார்ய கடாக்ஷமே விசேஷமானது.

கண்ணன் கழலிணை நண்ணும் மனத்தை அளிப்பவர் நம் இராமானுசன். கண்ணனுக்கும், உடையவருக்கும் உள்ள பொருத்தங்களை தூப்புலம்மான்,

*சமிதோய சங்கராதி கர்வ: ஸ்வபலாதுத்ருத யாதவப்ரகாச:|*
*அவரோபிதவான் ச்ருதே: அபார்த்தான் நநு ராமாவராஜ: ஸ ஏஷ பூய:||*

என்று நமக்குத் தெளிவாக்குகிறார். இதை சற்றே நோக்கினால் பின்வரும் பொருந்தங்கள் ஸ்பஷ்டம்.

1) நாமத்தில் ராம அநுஜனாக அவதாரம். உடையவரின் திருநாமம் ராமாநுஜன்.

2) அடக்குதலில் கோவர்த்தன கிரி ஏந்தி இந்த்ரனின் கொட்டத்தை அடக்கினான் பகவான். சங்கராதி களின் கொட்டத்தை உடையவர் அடக்கினார்

3) திருத்திப் பணிகொள்வதில் ப்ரதோஷ பூஜையில் சிவலிங்கத்தில் சேர்க்கப்பட்ட புஷ்பம், கண்ணன் திருவடிகளில் இருப்பதைக் கண்ட பார்த்தன் தெளிந்தான். உபநிஷத்திற்கு தவறான அர்த்தம் சொன்ன யாதவப்ரகாசருக்கு உண்மையான பொருளை விளக்கினார் உடையவர்.

மேலும்,

4) கண்ணனின் துயர் அறு சுடர் அடி போல் உடையவரின் திருவடிகளும் ஆச்ரிதர்களின் ஸம்ஸார து:க்கங்களை போக்குபவை



5) பத்துடை அடியவர்க்கு எளியவனான வெண்ணையுண்டான் போல் தன்னை அடைந்தார்க்கு உடையவர் ஸுலபர். பிறர்க்கு இருவரும் அறிய முடியா வித்தகர்கள்.

6) **எனக்கே தன்னைத் தந்த கற்பகம், என் அமுதம் கார்முகில் போலம் வேங்கடநல் வெற்பன்** என்று ஸ்ரீ நம்மாழ்வாருக்கு திருவேங்கடவன் தன்னையே அளித்தான்.

**ச்ருதி சிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே** என்று ஆழ்வாரின் கற்பகமான திருவேங்கடவனை ஸ்மரித்தே தன் ஸ்ரீபாஷ்யத்தை உபக்ரமிக்கிரார். ஸ்ரீ நிவாஸம் செய்யுமிடத்தில் அறிவு, தனம் முதலியவைகளுக்கு குறையிருக்காது. ஆதலால் தன் ஜயத்தை மங்கள ஸ்லோகத்திலேயே உறுதியிட்டார் என விளங்குகிறது.

*பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம் |*

*தர்ம ஸம்ஸ்த்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||*

என்றவாறு அவதாரங்களின் தேவையை பகவானே திருவாய் மலர்ந்தான். இந்த ஸ்ம்ருதி உடையவருக்கும் நன்கு பொருந்தும். எப்படி தக்க நேரங்களில் பகவான் அவதாரங்கள் எடுத்து தர்மத்தைக் காப்பாற்றினானோ, அவ்வாறே உடையவர் தக்க ஸமயத்தில் அவதரித்து ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸ்தாபனம் செய்தார். நம் இராமானுசன் செய்த உபகாரம் அளவிட முடியாதது என்பதை

*தஸ்மை ராமானுஜார்யாய நம: பரமயோகினே|*
*ய: ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ராணாம் அந்த: ஜ்வரம் அசீசமத்||*

ஸ்ரீஸுதர்சன ஸூரியின் ஸ்ரீபாஷ்ய வ்யாக்யான ஸ்ரீஸூக்தியில் ஸேவிக்கலாம்.

வேதங்கள், ஸ்ம்ருதிகள், ஸூத்ரங்கள் இவை களுக்கு உள் நோயை **(அந்தர்ஜ்வரம்)** உடையவர் நீக்கினார். அப்படிப்பட்ட பரமயோகியான ராமானுஜரை வணங்குகிறேன்.

**பரம் ப்ரஹ்ம ச வேத்யம் தத் ஸாக்ஷாத்கார க்ஷம** கண்ணனை முதலாசார்யாகக் கொண்டு வழியாக **பகவத் த்வைபான** (வேத வ்யாஸர்) **வால்மீக** (வால்மீகி) **மன** (மனு) **யாஜ்ஞுவல்க்ய** (யாஜ்ஞுவல்க்யர்) **கௌதம** (கௌதமர்) **ஆபஸ்தம்ப ப்ரப்ருதி** (ஆபஸ்தம்பர்) வரை பல மஹநீயர்கள் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த விஷயங்களைக் கூறியுள்ளனர் என்று வேதார்த்த ஸங்க்ரஹத்தில் அருளுகிறார்.

ஆதலால் நம் மதமானது கற்பனை அல்ல. பகவானின் மதம், ரிஷிகளின் மதம் என்பது தெளிவாகிறது. இந்த வைதிக மதத்திற்கு **ஆதிகளுக்குப்பிறகு இந்த யுகாரம்பத்தில் நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்** என்று ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளுகிறார். வேதங்களில் ஓதப்படும் ப்ரஹ்மத்தை உணர்ந்து, அதை அடையும் வழியை காண்பித்து க்ஷேமத்தைத் தரும் ஸித்தாந்தம்.

**விபரீத அர்த்த ஸமுத்பவ வ்யாகுத்வமே** ச்ருதிகளுக்கு ஏற்பட்ட நோய். இல்லாத விஷயத்தை இருப்பது போல் சொல்லி, கேட்பவர்களை நம்ப வைத்து, ப்ரசாரம் செய்வது. இப்படி சொந்த கருத்துக்களைத் திணிப்போர் அத்வைதிகள்.

வேத வாக்யங்கள் மூன்று விதம்.

1) **அபேத ச்ருதி -** சேதந, அசேதநங்களை தன்னுள் அடக்கிய ஈச்வரன் ஒருவன் இருப்பதால், இந்த சேர்த்தியால் ஐக்யத்தை குறிப்பவை

2) **பேத ச்ருதி -** தத்வங்களை தனித்தனியாக (உட்பிரிவுகளோடு) பிரித்துக்காட்டுபவை

3) **கடக ச்ருதி -** சேதநாசேதநங்களுக்கும் ஈச்வரனுக்கும் உள்ள தொடர்பை சொல்லி எப்படி ஈச்வரன் அந்தர்யாமியாக இருக்கிறான் என்று கூறுபவை

இவைகளிடையே முரண்பாடுகளாகத் தோன்றும் விஷயங்களை தெளிவுபடுத்தவே உடையவர் ஸ்ரீபாஷ்யம், வேதார்த்த ஸங்க்ரஹம் போன்ற க்ரந்தங்களை அருளினார்.

அபேத ச்ருதியை மட்டுமே ப்ரமாணமாகக் கொள்வோர் அத்வைதிகள். **ஸர்வத் கல்விதம் ப்ரஹ்ம** என்று அபதேம் மட்டுமே கொள்வார்கள்.

நித்யமான ச்ருதியின் ஒரு வாக்யத்தை / பாகத்தை மட்டும் ப்ரமாணம் என்றால் மற்ற பாகங்களை சரியில்லை என்றாகி விடுமல்லவா? வேதம் சரியில்லை / அர்த்தமற்றது என்றாகி விடுமல்லவா? இது தவறு என்பதை ஸ்ரீபாஷ்யகாரர்,

**பேத ச்ருதி மாத்ராபி உபகமே அபேத ச்ருதய: க்ருப்யேயு:, அபேத**

**ச்ருதி மாத்ராபி உபகமே பேத ச்ருதய: பாதிதா பவேயு:** என்று உணர்த்துகிறார்.

விசிஷ்டாத்வைத மதத்திற்கு எல்லா ச்ருதிகளும் ப்ரமாணம் தான். பேத அபேத ச்ருதிகளுக்கிடையே இருக்கும் போல் தோன்றும் விரோதத்தை களையவே கடக ச்ருதி என்பது ஸித்தாந்தம்.

**தத்வமஸி**

தத் ஜகத் காரணமாகவும், ஸகல கல்யாண குணங்களின் இருப்பிடமாக இருக்கும், குற்றமற்ற ப்ரஹ்மம்

த்வம் - ஜீவனுள் அந்தர்யாமியாக இருந்து, ஜீவனை தனக்கு சரீரமாகக் கொண்டிருக்கும் ப்ரஹ்மம்

ஆகவே ப்ரஹ்மத்தையே இரண்டு பதங்களாக (தத், த்வம்) , வேறு வழியில் குறிக்கின்றன

அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜனானாம் ஸர்வாத்மா என்ற ஸ்ருதி வசனம் ஸகல ஜனங்களுக்கு உள்புகுந்து

| சித்திரையில் முக்கிய உத்ஸவங்கள் |
|---|
| **சித்திரை வருஷப்பிறப்பு**<br>ஏப்ரல் 14 (வியாழன்) |
| **சித்ரா பௌர்ணமி**<br>ஏப்ரல் 16 (சனி) |
| **தோட்ட உத்ஸவம்**<br>ஏப்ரல் 23 (சனி) |
| **ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம்** (10 நாட்கள்)<br>ஏப்ரல் 26 (செவ்வாய்) முதல்<br>மே 5 (வியாழன்) வரை |
| **ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்**<br>மே 5 (வியாழன்) |
| **வஸந்த உத்ஸவம் (3 நாட்கள்)**<br>மே 1 (ஞாயிறு) முதல் மே 3 (செவ்வாய்) வரை |
| **அக்ஷய த்ருதீயை**<br>மே 3 (செவ்வாய்) |
| **திரு அவதார உத்ஸவம்**<br>மே 13 (வெள்ளி) |
| **மதுரகவிகள் திருநக்ஷத்ரம்**<br>மே 14 (சனி) |
| **ந்ருஸிம்ஹ ஜயந்தி**<br>மே 15 (ஞாயிறு) |

ஆத்மாவாக இருந்து ஆள்கிறான் என்று போற்றுகிறது. இதில் அந்தர்யாமியாக இருந்து நியமிப்பதாலேயே ஸர்வாத்மா என்பது ஸ்பஷ்டமாகிறது. இதை ப்ரஹ்ம ஸ்வரூப ஐக்யம் என்று கொள்ளலலாகாது

ஜகத் ஸர்வம் சரீரதே என்ற வாக்யத்தை அறிகையில், ஸ்வரூப ஐக்யமாக, சேதந அசேதநங்கள், சரீரியான பரமாத்வாவுக்கு சரீரங்கள் என்று தெளிவுற வேண்டும்.

இப்படியாக ச்ருதி விரோதமில்லாமல், ஸகல ச்ருதி ஸாமான்யம் ஏற்படும்படி செய்த இராமானுசன் தன் இயல்வு கண்டு, நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது, நாட்டிய நீசச் சமயங்கள் (வேதங்களின் நோய்) மாண்டன.

இதை ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், போற்றுகையில்

*அலர்ந்த அம்புயத்து இருந்து தேன் அருந்தி இன்னகல்,*
*அல்குலார் அசைந்து அடைந்த நடை கொளாதது அனமெனோ?? ,*
*நலம் தவிர்ந்ததால் அது என்கொல் நாவின் வீறு இழந்ததால்,*
*நா அணங்கு நாதர் தந்த நாவின் வீறு இழந்தது என்??*

*சலம் தவிர்ந்து வாது செய்து சாடி மூண்ட மிண்டரை,*
*சரிவிலேன் எனக்கு அனைத்து உரைத்த எதிராசர் தம்,*
*வலம் தரும் கை நாயனார் வளைக்கு இசைந்த கீர்த்தியால்,*
*வாரி பாலது ஆம் என்று மாசில் வாழி வாழியே!!!!*

**கேள்வி** மலர்ந்த தாமரை மேல் அமர்ந்து, தேனைப்பருகி, பொய்கைக் கரையில் வரும் ஸ்த்ரீகளை நோக்காமல் ஹம்ஸம் இருப்பதற்கு என்ன காரணம்?

**பதில்** தன் பெருமை இழந்ததால்

**கேள்வி :** ப்ரஹ்மாவால் தனக்குக் கொடுக்கப்பட்ட சக்தியான பாலையும், நீரையும் பிரிக்கும் தன்மையை / பெருமையை ஹம்ஸம் எப்படி இழந்தது?

**பதில்** முரட்டுவாதிகள் (நீசச்சமயங்கள்) உடையவரிடம் வாதப்போர் செய்தனர். குற்றமற்ற, உண்மையான ப்ரமாணங்களைக் கொண்டு உடையவர் அவர்களை



வென்று, இன்னும் யாவர் வாதம் புரிய வந்தாலும் தளரமாட்டேன் என்று ஸிம்ஹம் போல் கர்ஜித்தார். பகவானின் ஸங்கல்பத்தால், எதிராசரின் புகழ் உலகோங்கியது!!!! ஜலம் முழுதும் பாலாகிவிட்டது. ஹம்ஸம் தன் தன்மையை இழந்தது. இனி பிரிக்க ஒன்றும் இல்லையே!!!! இவ்வாறான ஸ்ரீபாஷ்யகாரரின் புகழுக்குப் பல்லாண்டு!!!

**மஹான் மஹீ அஸ்தபாயத்வி ஜாதோ த்யாம் ஸத்ம பார்திவம் ச ரஜ:** என்ற ஸ்ருதி வசனம் ஸ்ரீபாஷ்யகாரின் திவ்ய சரிதத்தைக் குறிப்பதாக உள்ளது.

உடையவரின் அவதாரமே ஒரு மஹத்தான விஷயம். அவதரித்தது தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அற நெறியாகவும் தெரிந்து, ஸித்தாந்த ஸ்தாபனம் செய்ய. கண்ணல்லால் தெய்வமில்லை என்றுணர்த்த. தன் திருமுடிக்கள், திருவடிகளால், உலகோர்களை நாரணற்கு என்று ஆக்குவதற்காக.

நல்லார் பரவும் இராமானுசனைக் கருதும் உள்ளம் பெற்ற பெரியோரை நாடி ஸ்ரீபாஷ்யகாரரின் க்ரந்தங்களில், அவர்தம் விஷயமான க்ரந்தங்களில் ஈடுபட்டு ப்ரவசனம் செய்ய உடையவரின் திருவடிகளில் ப்ரார்த்திப்போம்.


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் **'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** தை மாதம் முதல் இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004. போன்:
044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

# கண்ணனுக்கும் எம்பெருமானாருக்கும் ஒற்றுமை

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை முதல்வனாகக் கொண்ட நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஆசார்ய பரம்பரையில் நடுநாயகமாய் எழுந்தருளி, அப்பரம்பரை என்னும் ஹாரத்தின் ஓர் நாயகமணியாய் விளங்கி அதற்கு மேலும் அழகு சேர்ப்பவர் ஸ்வாமி ஸ்ரீராமானுஜர்.

*அடையார்கமலத்து அலர்மகள்கேள்வன் கையாழியென்னும்*
*படையொடு நாந்தகமும் படர்தண்டும் ஒண்சார்ங்கவில்லும்*
*புடையார்புரிசங்கமும் இந்தப்பூதலம்காப்பதற்கென்று*
*இடையே இராமானுச முனியாயின இந்நிலத்தே.*
(இராமானுச நூற்றந்தாதி 33)

‘இலைகள் நிறைந்த தாமரைப் பூவிலே வீற்றிருக்கும் அலர்மேல்மங்கையின் பதியான ஸ்ரீமந் நாராயணன் தன் திருக்கையில் தரித்திருக்கும் திருவாழியாழ்வானும், நந்தகமும், பகைவர்மேல் பாயும் கதையும், சார்ங்கமென்னும் வில்லும், பாஞ்சசன்னியமும் ஆகிய இவையைந்தும் இப்பூமண்டலத்தைக் காக்க இப்பரதகண்டத்தின் நடுவில் யதிராஜராக அவதரித்தன’ என்று எம்பெருமானுடைய பஞ்சாயுதங்களின் அவதாரமே ஸ்வாமி ராமானுஜர் என்று காட்டுகிறார் ஸ்வாமி திருவரங்கத்தமுதனார்.

ஸ்வாமி தேசிகனைப் போன்று ஆழ்வார்களிடத்திலும், பூர்வாசார்யர்கள் மற்றும் ஸ்ரீ பாஷ்யகாரரிடத்திலும் அளவற்ற பக்தியும், ஈடுபாடும் கொண்ட வேறொருவர் இல்லை. உடையவரைப் போலவே அவருக்குப் பிந்தைய காலங்களில் பிற மதவாதிகளைக் கண்டித்தும், வாதப் போர்களில் வென்றும் நம் ஸம்ப்ரதாயத்தை எள்ளளவும் எவரும் அசைக்க இயலாதவாறு ஸ்தாபித்தவர்களுள் முதன்மையானவர் ஸ்வாமி தேசிகன். அதனாலேயே ஸ்வாமி நயினாசாரியார்,

*வேங்கடேசாவதாரோயம் தத்கண்டாம்சோதவா பவேத் |*
*யதீந்த்ராம்சோதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம்||*
(ஸ்ரீ தேசிக மங்களம் 4)

என்று ஸ்வாமி தேசிகனை திருவேங்கடமுடையானின் அவதாரம் மற்றும் அவன் திருமணியின் அவதாரமாக மட்டுமல்லாமல் ஸ்வாமி ராமானுஜரின் திரு அவதாரமாகவும் மங்களாஸாசனம் செய்கிறார்.

எம்பெருமானாருடைய திருமேனியின் மேன்மை, அவர் கொண்டுள்ள ஞான முத்திரையின் சிறப்பு, அவர் அருளிச்செய்த ஸ்ரீ ஸூக்திகளின் பெருமைகள், பிற மதங்களைக் கண்டித்து நம் ஸம்ப்ரதாயத்தை ஸ்தாபித்தல் என்ற பல தத்வங்கள் அடங்கிய ஒரு ஸ்தோத்ர ரத்னத்தை அருளி, அதற்கு ‘ஸ்ரீ யதிராஜஸப்ததி’ என்று தாமே திருநாமமிட்டருளி, யதிகளுக்கு எல்லாம் இவரே தலைவன் என்று தலைக்கட்டி, எம்பெருமானார் திருவடிகள் மீது தாம் கொண்ட எல்லையற்ற பக்தியை நிர்தாரணம் பண்ணுகிறார் ஸ்வாமி தேசிகன். அதில் 13ம் ஸ்லோகத்தில் ஸ்வாமி ராமானுஜருக்கும் எம்பெருமான் கண்ணனுக்கும் உள்ள ஒற்றுமையை வெளிப்படுத்தி கண்ணனே ஸ்ரீபாஷ்யகாரராக திருவவதரித்தான் என்று ஸ்தாபித்தருளுகிறார் நம் தூப்புல் குலமணி.

*சமிதோதய சங்கராதி கர்வ:*
*ஸ்வபலாதுத்த்ருத யாதவப்ரகாச: |*
*அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்*
*நநு ராமாவரஜ: ஸ ஏஷ பூய: ||*
(ஸ்ரீ யதிராஜ ஸப்ததி 13)

**‘மைந்நம்பு வேல்கண் நல்லாள் முன்னம் பெற்ற வளைவண்ணம் நன்மாமேனி, தன்நம்பி நம்பி’** என்றபடி கண்ணபிரான் பலராமனுக்கு தம்பியாதலின் ராமாநுஜன் என்ற திருநாமம் கொண்டான். ஜகதாசார்யரான ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ராமாநுஜர் என்ற திருநாமம் ப்ரஸித்தம்.

**சமிதோதய சங்கராதி கர்வ:**

கண்ணன், பாணாஸுர யுத்தத்தில் சங்கரனைத் தோல்வி அடையச்செய்தும், இந்திரன் மழையைப் பொழிந்தபோது, குன்றமேந்திக் குளிர்மழை காத்தும், நான்முகன் பசுங்கன்றுகளை மறைத்தபோது, வேறு கன்றுகளை உண்டு பண்ணியும் அவர்களின் கர்வத்தை அடக்கினான்.

சங்கரர், பாஸ்கரர் ஆகியோரின் மதங்களைத் தம் வாதத்திறமையால் கண்டித்தார் ஸ்வாமி ராமானுஜர். சங்கரர், ‘ப்ரஹ்மம் ஸத்யம், உலகம் மாயை, ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றேயன்றி வேறில்லை, ப்ரஹ்மம் நிர்குணம் **(ப்ரஹ்மஸத்யம் ஜகந்மித்யா ஜீவோப்ரஹ்மணைவ ந அபர:)**’ என்று வேதத்தில் உள்ள அபேதச்ருதிகள் கொண்டு அத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தார். ஸ்வாமி ராமானுஜரோ, ‘ப்ரஹ்மமும் ஸத்யம்; உலகமும் ஸத்யம்; ஜீவனும் ஸத்யம். ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றல்ல; மாறாக ப்ரஹ்மத்தை, ஸகல ஜீவன்கள் மற்றும் அசேதனப் பொருள்களையும் தமக்குச் சரீரமாகக் கொண்டு அவற்றின் ஒவ்வொன்றிலும் அந்தர்யாமியாய் இருப்பவராக அறியவேண்டும். இதைத் தவிர அறிய வேண்டியது வேறில்லை. பரமபுருஷனை அநுபவிப்பவனாகவும், அநுபவிக்கப்படும் பொருளாகவும், ஏவுகிறவராகவும் இந்த மூன்று

நிலைகளில் அறிந்து கொள்ளவேண்டும் **(ஏதத் ஜ்ஞேயம் நித்யமேவாத்மஸம்ஸ்த்தம் நாத: பரம் வேதிதவ்யம் ஹி கிஞ்சித், போக்தா போக்யம் ப்ரேரித்தாஞ்ச மத்வா ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரஹ்மமேதத்),** ப்ரஹ்மம் எண்ண முடியாத திருக்கல்யாண குணங்களின் கடல் போன்றவன்.' என்பதனை உபநிஷத்துக்களைப் ப்ரமாணமாகக் கொண்டும் ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளை அதற்குத் துணையாகக் கொண்டும் ஸ்தாபித்தார். அதேபோன்று பாஸ்கர மதத்தையும் கடகச்ருதி வாக்யங்களைப் ப்ரமாணமாகக் கொண்டு கண்டித்து அவர்களின் செருக்கை அடக்கினார்.

**ஸ்வபலாதுத்த்ருத யாதவப்ரகாச:**

யாதவ வம்சத்தாரைத் தொடர்ந்து துன்புறுத்தி வந்த கம்ஸனைத் தன் வலிமையால் கொன்று யாதவர்களை நன்னிலையில் நிறுத்தி அவர்களை ஸந்தோஷமாக வாழ வழிவகுத்தான் கண்ணன்.

யாதவப்ரகாசர் **'கப்யாஸம் புண்டரீகமேவ அக்ஷிணீ'** என்ற உபநிஷத் வாக்யத்திற்கும் இன்னும் பிற வாக்யங்களிற்க்கும் வேதத்திற்கு முரண்பாடான அர்த்தங்களைக் கூறிவர, ஸ்ரீபாஷ்யகாரர் தம்முடைய கூர்மையான ஞானத்தினால் அதன் நேரிய பொருளைக் கூறித் தெளிவித்து, அவரை ஆட்கொண்டு, ஓர் ஸ்ரீவைஷ்ணவனாக்கி உஜ்ஜீவிக்கச் செய்தார்.

**அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்**

த்ரௌபதியை ஒரு மாபெரும் சபையில் அவமானப்படுத்திய துர்யோதனாதிகளையும் அந்த அநீதியைத் தடுக்காத பீஷ்ம த்ரோணாதிகளையும் பாரதப் போரில், பார்த்தனுக்குத் துணையாக, ஓர் ஸாரதியாய் நின்று மடியச்செய்தான் பார்த்தஸாரதியான கண்ணன். வேதாந்தத்திற்கு பிற மதத்தினர் வேதவ்ருத்தமாக கூறிய தவறான அர்த்தங்கள் அனைத்தும் அழிந்துபோம்படி தம் ஸ்ரீ ஸூக்திகளின் மூலம் கண்டித்து, அவ்வர்த்தங்களைச் சீர்படுத்தி வெளியிட்டருளினார் ஸ்ரீபாஷ்யகாரர்.

ஆயர்குலக் கொழுந்தாக அவதரித்த பரமனிடத்தில் ஸௌலப்ய ஸௌசீல்யாதிகளே ப்ரதானமாகத் தலைக்கட்டும். அறிவொன்றுமில்லாத அக்குலத்துடன் தங்கு தடையின்றி இரண்டறக் கலந்து, அவர்களால் கட்டுண்டும் மொத்துண்டும் பல திவ்ய சேஷ்டிதங்களைச் செய்து வசீகரித்தான் கண்ணன். இருப்பினும் அக்குலத்தை ஹிம்ஸித்து வந்த கம்ஸ துர்யோதனாதிகளிடத்தில் மிகுந்த சீற்றம் கொண்டு, அவர்களைக் கொன்றொழித்து, தர்மத்தை ஸ்தாபித்து ரக்ஷித்தருளினான்.

*ஆரணநூல் வழிச் செவ்வை அழித்திடும் ஐதுகர்க்கு ஓர்*
*வாரணமாய் அவர் வாதக் கதலிகள் மாய்த்த பிரான்*
*ஏரணி கீர்த்தி இராமானுசமுனி இன் உரைசேர்*
*சீரணி சிந்தையினோம் சிந்தியோம் இனித் தீவினையே*
(அதிகார ஸங்க்ரஹம் 4)

அதேபோல 'ஸத்வ குணமே ப்ரதானமாகத் தலையெடுக்கப் பெற்றவராயினும், ஸ்ரீபாஷ்யகாரர் வேதாந்தத்திற்கு முரண்பட்ட அர்த்தங்களைக் கூறிவந்த ஹைதுகர்களின் விஷயத்தில் ஒரு மதங்கொண்ட யானையாய் நின்று, கொடுந்தன்மையை ஏறிட்டுக் கொண்டு, அவர்கள் வாதங்கள் என்னும் வாழையை முறித்துத் தள்ளி தர்மத்தை ஸ்தாபித்தார்' என்று ஸ்வாமி தேசிகன் எம்பெருமானார் விஷயமாகக் காட்டும் உவமானம் இங்கே அநுஸந்திக்கத்தக்கது.

இவ்வொற்றுமைகளை ஆராய்ந்து பார்க்கையில் எம்பெருமான் கண்ணனே ஸ்ரீபாஷ்யகாரராக அவதரித்தானென்பது பொருந்தும் என்று தலைக்கட்டு கிறார் ஸ்வாமி தேசிகன்.

மேலும்:

*உபவீதிநமூர்த்வபுண்ட்ரவந்தம்*
*த்ரிஜகத்புண்யபலம் த்ரிதண்டஹஸ்தம் |*
*சரணாகதஸார்தவாஹமீடே*
*சிகயா சேகரிணம் பதிம் யதீநாம் ||*
(ஸ்ரீ யதிராஜ ஸப்ததி 11)

'ஸந்யாஸம் பூண்ட பிறகும் யஜ்ஞோபவீதத்தைத் தரித்துக் கொண்டும், ஊர்த்வ புண்ட்ரங்களை எந்நேரமும் அணிந்து கொண்டும், த்ரிதண்டத்தைத் தன் திருக்கையில் ஏந்தியும், சிகையை வைத்துக் கொண்டும், நித்ய கர்மங்களை விடாமல் நடத்திக் காட்டி, சாஸ்த்ரம் அறிவித்த வழியிலிருந்து க்ஷணமும் பிழறாமல் நம் போன்ற மந்தர்களுக்கு மட்டுமின்றி யதிகளுக்கும் ஓர் முன்னோடியாக எழுந்தருளியிருந்தவர் ஸ்வாமி ராமானுஜர். இதனாலேயே அவர் 'யதிராஜர்' என்றும் 'ஜகதாசார்யன்' என்ற பெருமைகளையும் கொண்டார்.' என்று மேலும் கொண்டாடுகிறார் ஸ்வாமி தேசிகன்.

*ஸ்வாமி தேசிகனின் திருவடியைப் பற்றுகையில்*
*மா மலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினன் தாள்*
*தூ மலர் சூடிய தொல் அருள் மாறன் துணை அடிக்கீழ்*
*வாழ்வை உகக்கும் இராமானுசமுனி வண்மை போற்றும்*
*சீர்மையன் எங்கள் தூப்புல் பிள்ளை பாதம் என் சென்னியதே*
(பிள்ளையந்தாதி 1)

என்று ஸாதித்து, ஸ்ரீ பாஷ்யகாரரின் ஔதார்ய குணத்தை வாயாரப் புகழ்ந்து பேசிக் கொண்டாடும் ஸ்வாமி தேசிகன் என்று ஸ்வாமி ராமானுஜரை முன்னிட்டுக்கொண்டு பற்றுகிறார் ஸ்வாமி குமாரவரதாசார்யர்.

எம்பெருமானை க்ஷணகாலமும் பிரியாமல் அவனது திருமார்பையே உறைவிடமாகக் கொண்ட பெரிய பிராட்டி அவன் அழகுக்கு மேலும் அழகு சேர்க்கிறாள். அவன் திருவடித் தாள்களைத் தம் திருமுடியில் சூட்டி நிற்பவர் ஸ்வாமி நம்மாழ்வார். ஸகல ஜீவன்களும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்று

இப்பூவுலகில் திருவவதரித்து தம் ஸ்ரீஸூக்திகள் மூலம் எம்பெருமான் திருவடியே உபாயம் என்று அறிவித்த அக்கருணை வள்ளலின் திருவடியை என்றென்றும் ஆச்ரயித்து, ஸ்ரீ பாஷ்யம் முதலான ஸூக்திகள் மூலமாக உலகுக்கு க்ஷேமத்தைச் செய்தருளியவர் நம் இராமானுஜர். அவருடைய திருக்கல்யாண குணங்களைக் கொண்டாடுவதையே தம் வாழ்நாளின் ப்ரதாமான கர்தவ்யமாகக் கொண்டவர் நம் ஆசார்ய வள்ளல் ஸ்ரீதேசிகன். இத்தகைய பெருமைகள் வாய்ந்த ஆழ்வார், எம்பெருமானார் மற்றும் ஸ்வாமி தேசிகனின் திருவடிகள் நம் முடியை அலங்கரிக்க வேண்டுமென்று ப்ரார்தித்து, அவர்கள் காட்டிய சரணாகதி என்னும் உபாயத்தைப் பற்றி எம்பெருமான் மற்றும் பிராட்டியின் திருவடிகளை அடைவோமாக!


## ஆழ்வார்கள்

| ஆழ்வார் | அம்சம் | திருநக்ஷத்ரம் | அவதார ஸ்தலம் | அருளிய ப்ரபந்தங்கள் (பாசுரங்கள்) | ப்ரபந்த / பாசுர எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| பொய்கையாழ்வார் | பாஞ் சஜந்யம் | ஐப்பசி திருவோணம் | திருவெஃகா | முதல் திருவந்தாதி (100) | 1/100 |
| பூதத்தாழ்வார் | கதை | ஐப்பசிஅவிட்டம் | திருக்கடல் மல்லை | இரண்டாம் திருவந்தாதி (100) | 1/100 |
| பேயாழ்வார் | நந்தகம் | ஐப்பசிசதயம் | திருமயிலை | மூன்றாம் திருவந்தாதி (100) | 1/100 |
| திருமழிசை யாழ்வார் | ஸுதர்சநம் | தைமகம் | திருமழிசை | நான்முகன் திருவந்தாதி (96), திருச்சந்த விருத்தம் (120) | 2/216 |
| நம்மாழ்வார் | ஸேனை நாதன் | வைகாசி விசாகம் | திருக்குருகூர் | திருவிருத்தம் (100), திருவாசிரியம் (7), பெரிய திருவந்தாதி (87), திருவாய்மொழி (1102) | 4/1296 |
| மதுரகவியாழ்வார் | குமுதம் | சித்திரை சித்திரை | திருக்கோளூர் | கண்ணி நுண் சிறுத்தாம்பு (11) | 1/11 |
| குலசேகராழ்வார் | கௌஸ்துபம் | மாசிபுநர்வஸு | திருவஞ்சிக்களம் | பெருமாள் திருமொழி (105) | 1/105 |
| பெரியாழ்வார் | கருடன் | ஆனிஸ்வாதீ | ஸ்ரீவில்லிபுத்தூர் | பெரியாழ்வார் திருமொழி (473) | 1/473 |
| ஆண்டாள் | பூமாதேவி | ஆடிபூரம் | ஸ்ரீவில்லிபுத்தூர் | திருப்பாவை (30), நாச்சியார் திருமொழி (143) | 2/173 |
| தொண்டரடிப்பொடி ஆழ்வார் | வனமாலா | மார்கழிகேட்டை | திருமண்டங்குடி | திருமாலை (45), திருப்பள்ளியெழுச்சி (10) | 2/55 |
| திருப்பாணாழ்வார் | ஸ்ரீவத்ஸம் | கார்த்திகை ரோஹிணீ | திரு உறையூர் | அமலனாதி பிரான் (10) | 1/10 |
| திருமங்கை யாழ்வார் | சார்ங்கம் | கார்த்திகை க்ருத்திகை | திருக்குறையலூர் | பெரிய திருமொழி (1084), திருக்குறுந்தாண்டகம் (20), திருநெடுந்தாண்டகம் (30), திருவெழுக்கூற்றிருக்கை (1), சிறிய திருமடல் (40), பெரிய திருமடல் (78) | 6/1253 |
| ஸ்ரீராமாநுஜர் | ஆதிசேஷன் | சித்திரை திருவாதிரை | ஸ்ரீபெரும்பூதூர் | இராமாநுச நூற்றந்தாதி (108) திருவரங்கத்தமுதனார் அருளியது | 1/108 |
| *** துய்ய தமிழ் இருபத்துநான்கின் பாட்டின் தொகை நாலாயிரம்** | | | | | **24/4000*** |

# ஆசார்யர்கள்

| ஆசார்யர் | அவதார ஸ்தலம் | திருநக்ஷத்ரம் | அருளிய க்ரந்தங்கள் |
|---|---|---|---|
| நாதமுனிகள் | வீரநாராயண புரம் | ஆனி–அநுஷம் | ந்யாய தத்வம், யோக ரஹஸ்யம் |
| உய்யக்கொண்டார் | திருவெள்ளறை | சித்திரை–க்ருத்திகை | |
| மணக்கால் நம்பி | மணக்கால் | மாசி–மகம் | |
| ஆளவந்தார் | காட்டுமன்னார் கோயில் | ஆடி–உத்தராடம் | ஆகம ப்ராமாண்யம், புருஷ நிர்ணயம், ஆத்ம ஸித்தி, ஸம்வித் ஸித்தி, ஈச்வர ஸித்தி, கீதார்த்த ஸங்க்ரஹம், சது ச்லோகீ, ஸ்தோத்ர ரத்நம் |
| பெரிய நம்பி | திருவ்ரங்கம் | மார்கழி–கேட்டை | |
| திருக்கோட்டியூர் நம்பி | திருக்கோட்டியூர் | வைகாசி–ரோஹிணீ | |
| திருமாலையாண்டான் | திருமாலிருஞ் சோலை | மாசி–மகம் | |
| பெரிய திருமலை நம்பி | திருமலை | சித்திரை–ஸ்வாதீ | |
| திருக்கச்சி நம்பி | பூவிருந்தவல்லி | மாசி–ம்ருகசீர்ஷம் | |
| ஸ்ரீராமாநுஜர் | ஸ்ரீபெரும்பூதூர் | சித்திரை–திருவாதிரை | ஸ்ரீபாஷ்யம், வைகுண்ட கத்யம், ஸ்ரீரங்க கத்யம், சரணாகதி கத்யம், வேதார்த்த ஸங்க்ரஹம், கீதா பாஷ்யம், வேதாந்த ஸாரம், வேதாந்த தீபம், நித்ய க்ரந்தம் |
| எம்பார் | மதுர மங்கலம் | தை–புநர்வஸு | |
| கூரத்தாழ்வான் | கூரம் | தை–ஹஸ்தம் | ஸ்ரீ ஸ்தவம், வைகுண்ட ஸ்தவம், அதிமாநுஷ ஸ்தவம், ஸுந்தரபாஹு ஸ்தவம், வரதராஜ ஸ்தவம் |
| திருவரங்கத்தமுதனார் | திருவரங்கம் | பங்குனி–ஹஸ்தம் | இராமாநுச நூற்றந்தாதி |
| முதலியாண்டான் | புருஷ மங்கலம் | சித்திரை–புநர்வஸு | |
| திருக்குருகைப்பிரான் பிள்ளான் | திருப்பதி | ஐப்பசி–பூராடம் | திருவாராயிரப்படி வ்யாக்யானம் |
| எங்களாழ்வான் | திருவெள்ளறை | வைகாசி–ஸ்வாதீ | ஸ்ரீ விஷ்ணுசித்தீயம் |
| பராசர பட்டர் | திருவரங்கம் | வைகாசி–அநுஷம் | பகவத்குண தர்பணம், அஷ்ட ச்லோகீ, தத்வ ரத்நாகரம், ப்ரணவ விவரணம், ஸ்ரீ குணரத்ந கோசம், ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவம், க்ரியா தீபம், தத்வ–த்ரய ச்லோகம் |
| நஞ்சீயர் | திருநாராயண புரம் | பங்குனி–உத்தரம் | ஒன்பதினாயிரப்படி வ்யாக்யானம் |
| நம்பிள்ளை | நம்பூர் | கார்த்திகை–க்ருத்திகை | ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யானம் |
| பெரியவாச்சான் பிள்ளை | சேங்கணூர் | ஆவணி–ரோஹிணீ | திவ்ய ப்ரபந்த வ்யாக்யானம், பாசுரப்படி இராமாயணம், ராமாயண தனி ச்லோகீ |
| நடாதூர் அம்மாள் | நடாதூர் | சித்திரை–சித்திரை | 15 க்ரந்தங்கள் |
| அப்புள்ளார் | காஞ்சீபுரம் | சித்திரை–திருவாதிரை | ந்யாய குலிசம் |
| ஸ்ரீ வேதாந்த தேசிகன் | தூப்புல் | புரட்டாசி–திருவோணம் | 120–க்கு மேற்பட்ட க்ரந்தங்கள் |
| குமார வரதாசார்யர் | காஞ்சீபுரம் | ஆவணி–ரோஹிணீ | தேசிக மங்களம், ப்ரார்த்தநா அஷ்டகம், ப்ரபத்தி, திநசர்யா, விக்ரஹ த்யானம், பிள்ளை அந்தாதி |

ஸ்ரீ:





*With Pranams:*

## S. Rangarajan,

Chairman & Managing Director,
Data Patterns (India) Limited,
Gurukripa, 15, 1st Street,
Abiramapuram, Chennai - 18.

**SVDD thanks Sri S. Rangarajan**
for sponsoring this month's issue of Desika Sandesam










தன்வந்தரி ஹோமம்





ச்ரவணம்









சதயம்